// பத்திரிக்கை விளம்பரம்//

தமிழ்நாடு அரசு

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

கீ.வ.குப்பம் வட்டம், வேலூர் மாவட்டம்.

**கூடுதல் அறிவிக்கை எண். A1/ 01/2025** **நாள்: 26.09.2025**

**அரசு கடிதம் (Ms.)No.636/வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை Ser.8(1)/2025 நாள் –18.09.2025 –இல் கிராம உதவியாளர் பணிநியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பு நிர்ணயம் செய்வது குறித்து வழங்கப்பட்ட தெளிவுரைகளின்படி** வேலூர் மாவட்ட வருவாய் அலகு, கீ.வ.குப்பம் வட்டத்தில் காலியாக உள்ள 01 (ஒன்று) கிராம உதவியாளர்கள் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் **கூடுதலாக** வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். **இப்பணிநியமனத்திற்கு 12.07.2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி ஏற்கனவே விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதால் அவர்கள் மீண்டும் தற்போது விண்ணப்பிக்கத் தேவையில்லை.**

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | : | 29.09.2025 |
| விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 13.10.2025 |
| வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித் தேர்வு | : | தனியே கடிதம் மூலம் தெரிவிக்கப்படும் |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | : | |

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் – Level 06 (ரூ.11,100/- – ரூ.35,100/-) |
| வட்டத்தின் பெயர் | கீ.வ.குப்பம் வட்டம் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | பணிநியமனம் செய்யப்பட உள்ள கிராமங்களின் விவரம் |
| | 1) நாகல் கிராமம் |

**2. இனச்சுழற்சி விவரம்**

| வ. எண். | இனச் சுழற்சி எண் | வகுப்பு | பொது/ பெண் | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் | விதவை / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|
| 1 | 8 | BC(other than backward class muslims) | NP(W)(DW) | பெண் | ஆதரவற்ற விதவை (Destitute Widow) |

**3. கல்வித் தகுதி**

தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC – Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு – SSLC (Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

**4. வயது**

| வயது வரம்பு | BC/MBC/DNC | SC/ST/Destitute Widow | OC/GT |
|---|---|---|---|
| அதிகபட்ச வயது | 39 | 42 | 32 |
| குறைந்தபட்ச வயது | 21 | 21 | 21 |
| வயது குறித்து தகுதி ஏற்படுத்தும் தேதி | 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும். | | |

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும். (Tamil Nadu Government Servants (Conditions of Service) Act – 2016)

முன்னாள் இராணுவத்தினருக்கு

50 வயது – இதர வகுப்பினர்

55 வயது - ST /SC(A)/SC/MBC/DNC/ BC /BC(M)

**5. இதர தகுதிகள்/ நிபந்தனைகள்-**

- விண்ணப்பதாரர்கள் கீ.வ.குப்பம் வட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- தமிழில் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
- கிராம உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 312, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி-8(1)) துறை, நாள்: 04.06.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய கல்வித்தகுதி, மிதிவண்டி/இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம் (Native Resident), நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப்பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.
- இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியாக தேர்வு நடத்தப்பட மாட்டாது. மாறாக இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லையெனில் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியே தேர்வு நடத்தப்படும்.
- பணி நியமனத்தின்போது உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- இருதார மனைவி உடையவர்களாக இருக்க கூடாது மற்றும் வேறு கணவர் /மனைவி உயிருடன் உள்ள ஒருவரை திருமணம் செய்திருக்க கூடாது.
- தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அழைப்பு கடிதம் (Calling Letter) பெறுவது மட்டுமே பணி நியமனத்திற்கான ஆணை எனக் கருதப்பட மாட்டாது.
- பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- நேர்முக தேர்வின் போது சான்றுகள் சரிப்பார்ப்பின் போதும் அசல் சான்றுகள் / ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

## 6. விண்ணப்பிக்கும் முறை

- விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை https://vellore.nic.in /notice_category/recruitment/ என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் கீ.வ.குப்பம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 13.10.2025–க்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித் தேர்விற்கும், நேர்முக தேர்விற்கும் உரிய நாள் குறிப்பிட்டு விண்ணப்பதாரர்களுக்கு தனியே கடிதம் அனுப்பப்படும்.

**வட்டாட்சியர்,**
**கீ.வ.குப்பம்.**